Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 108/2018
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.06 , Page.No. 103/2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. மூர்த்தி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கோவிந்தசாமி | தொழில் | சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் |
| கிராமம் | மாக்கனுர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 51 |
| | | | |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 1-2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 14th day of October 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>அ.சா.06 திரு. மூர்த்தி முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் பணி செய்து வருகிறேன். சுமார் 5-6 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் வருடம் நினைவில்லை. ஒரு நாள் என் பக்கத்து நிலத்துக்காரர் இடத்தில் சண்டை பிரச்சனை நடந்தது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்ய வந்திருந்தனர். அப்போது என்னை சாட்சியாக இருக்கும் படி கேட்டுக்கொண்டதின் பேரில் நான் பார்வை மகசரில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையது தான். மேலும் அன்றைய தினமே போலீசார் என்னிடம் கைப்பற்றுதல் மகசரில் ஒரு கையொப்பம் பெற்றார்கள். ஆனால் பொருட்களை என் முன்னிலையில் கைப்பற்றவில்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையது

தான், **(அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 04 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

. நான் மொத்தமாக 3 கையொப்பங்கள் செய்தேன். மகசர் தயார் செய்வதாக கூறி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 108/2018
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.05 , Page.No. 103/2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பன்னீர் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. பரசுராமன் | தொழில் | மேஸ்திரி |
| கிராமம் | கோனேரிக்குப்பம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 57 |
| | | | |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 1-2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 14th day of October 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>அ.சா.05 திரு. பன்னீர் முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் வருடம் நினைவில்லை. ஒரு நாள் என் பக்கத்து நிலத்துக்காரர் இடத்தில் சண்டை பிரச்சனை நடந்தது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்ய வந்திருந்தனர். அப்போது என்னை சாட்சியாக இருக்கும் படி கேட்டுக்கொண்டதின் பேரில் நான் பார்வை மகசரில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1ம் கையொப்பம் என்னுடையது தான் **(அந்த பார்வை மகசர் என்னால் அ.சா.ஆ.02 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. )** மேலும் அன்றைய தினமே போலீசார் என்னிடம் வேறு ஒரு கையொப்பம் பெற்றார்கள் ஆனால் அந்த கையொப்பம் எதற்காக இட்டேன் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான், **(அந்த கையொப்பம்**

**மட்டும் அ.சா.ஆ 03 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

. போலீசார் என் முன்னிலையில் களைகொத்தி மற்றும் கல் ஆகியவற்றை கைப்பற்றினார்களா என்றால் இல்லை. நான் போலீசார் விசாரணனையில் கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

. போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் கையொப்பம் செய்தேன் என்றாலும் எதற்காக கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் கையொப்பத்தை எதற்காக பயன்படுத்திக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.